T.D.R.C. 636

R.R.NO. 8-4-1905

நஞ்சு புஸ்தகம்

O-,8MDI,N
1905
119068

ஸ்ரீ[illegible]துணை.

# NALUNGU BOOK I

BY

S. DORAISAMY IYER

*Agent, R. P. Studio Tinnevelly.*

# நலுங்குப் புஸ்தகம்.

## முதற் பாகம்.

இஃது

இரத்தினகிரீஸ்வர ஸ்வாமியின் அருளை முன்னிட்டு

திருச்சிராப்பள்ளி ஜில்லா

குளித்தலைத் தாலுகா மணத்தட்டை கிராமம்

மகா-ள-ள-ஸ்ரீ

சின்னசாமி அய்யரவர்கள்

ஜேஷ்ட குமாரர்

போடோகிராபர்

எஸ். துரைஸாமி அய்யரால்

இயற்றப்பட்டு [illegible]

திருநெல்வேலி

“[illegible]” அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

(First Edition 1000 Copies—முதற்பதிப்பு 1000 பிரதிகள்

19[illegible]-வது வருஷம் [illegible]

TINNEVELLY—திருநெல்வேலி

(Registered Copy Right)—(ரிஜிஸ்டர்ட் காபிரைட்)

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

# NALUNGU BOOK

BY

S. DORAISAMY-IYER

*Agent, R. P. Studio Tinnevelly.*

# நலுங்குப் புஸ்தகம்.

இஃது

இரத்தினகிரிசுவாமிசன்னதிமுன்வீட்டு

திருச்சிராப்பள்ளிஜில்லா

குளித்தலைத் தாலூகா மணத்தட்டை கிராமம்

மகா—ள—ள—ஸ்ரீ

சின்னஸ்வாமி அய்யரவர்கள்

ஜேஷ்ட குமாரர்

போட்டோகிராபர்

எஸ். துரைஸ்வாமி அய்யரால்

இயற்றப்பட்டு மேற்படியாரால்

திருநெல்வேலி

"நூருல் இஸ்லாம்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

(First Edition 1000 Copies—முதற்பதிப்பு 1000 பிரதிகள்)


1935-விசுவாவசு ௵

TINNEVELLY—திருநெல்வேலி

(*Registered Copy Right*]—[ரிஜிஸ்டர்ட் காபிரைட்)

இதின் விலை அணா 4.

O-) AMD! N
No 5
11906



ஸ்ரீ தண்டபாணி துணை.

## முன்னுரை.

எனதன்பர்களே!

"நலுங்குப்புஸ்தகம்" என்னும் இச்சிறுபுஸ்தகத்தை எழுதிய என் உள்மனக்கருத்து நமது நாட்டுச்சிறுமிகளாகிய தமிழ்ப் படித்த பாலியப்பெண்பிள்ளைகள் மிக்க எளிதாகப்படிக்கத் தமிழ் நடையிலும், சாஹித்தியமுடைய பற்பலவித [illegible] வர்ண மெட்டுகளிலும் ஆத்மார்த்தமாகப் பிரஸ்தங்களிலும் மத்தியஸ்தாக முண்டாக ஸ்ருங்காரரஸங்களிலும், [illegible] பதங்களின் றிப்படிக்கப்படிக்க மனதிற்கு ஓர் ஸன்மார்க்கசந்துஷ்டியான இன்பத்தைக்கொடுத்து அதிக சிரமமின்றி விருத்தியாகட்டுமென்பதே, இதில் சில ஸம்ஸ்கிருதபதங்களை உபயோகித்திருப்பது வாசக நடைக்கு ஓர் ஸ்ருங்காரத்தைஉண்டுபண்ணுகிறது.

வித்வத்சிகாமணிகளாகிய பெரியோர்களே! இப்புஸ்தகத்திலுள்ள பாட்டுகளின் ஸாராம்சங்களையும் எழுதிய என் மனக்கருத்தையு மட்டும் மனதிற்கொண்டு, ஏதேனும்பிழைகளிருக்கின் "அன்னபக்ஷியானது நீரிற் கலந்தபாலில் நீரைப்பிரித்துப் பாலைக் குடிப்பதுபோற்" குற்றங்களைத் தள்ளி குணத்தையே க்ரஹித்து பிழைபொறுத்து என்னை மிக்க அன்போடு மன்னித்து அப்பிழைகளை விளக்கி எழுதிதெரிவிப்பீர்களென்று அனேக கோடிவந்தனஞ் செய்து மிக்கத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பர்களுக்கு அபிமானி

1905-ம் ளு. அக்டோபர்-மீ } எஸ். துரைஸாமி அய்யர்
திருநெல்வேலி.

உ

## சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரந்தாலூகா. அரிகேசநல்லூர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ பு. வ. முத்தையப்பையரவர்கள் இயற்றிய

வெண்பா.

மெச்சுபுகழ் போட்டகிராப் மேதுரை ஸாமியய்யர்
பக்ஷமொடு செய்தனுக்குப்பாட்டுரைக்க—இச்சைபெறும்
நாவினிக்கும் மேனினிக்கும் நாட்டில் மணம்பொருந்தும்
பாவையர்க்கெல் லாமுவக்கும் பார்.

ஆத்தங்குடி தாமோதரங்கனைக்கும் பிள்ளை குமாரர் மக-ள-ள-ஸ்ரீ சங்கரதாஸ் அவர்கள் சொல்லிய

வெண்பா.

தெலுங்கு தமிழ்மெட்டு தேர்ந்தி லிஷ்டோட்
டிலுங்குணமாய்ப் பாட விளைந்து—நலுங்கு
வகைச்சாமிக் காக வழுத்தினு நல்ல
துரைச்சாமி வேளு முவந்து.

திருநெல்வேலிஜில்லா சங்கரநயினார்கோவில்த்தாலூகா திருவேங்கடம் மக-ள-ள-ஸ்ரீ சங்கரநாராயணபாரதிகள் பாடிய

வெண்பா.

மூவருண மெட்டிசையால் மூன்கடைந்த ஆரமுதக்
கோவையுறு சீர்நலுங்கு கூறினான்—பாவலர்க
ளென்றுறும் போற்று மெழில்கொடுரை சாமிமனன்
மின்று மயிற்கையான் மேல்.

## சாற்றுக்கவிகள்

இஃது திருநெல்வேலிஜில்லா அரிகேசவநல்லூர் வாழும் மக-ா-ஸ்ரீ L. முத்தையாபாகவதரவர்களால் இயற்றிய

கலித்துறை

தெலுங்குந் தமிழுஞ் சீர்பெருமிங்கிலீஷுந் திசைகளும்
நலங்குஞ் சாவளி கோட்டைகளுமெந்த நல்லசபையும்
குலுங்கிச்சிறக்கப்பஞ் செய்திடவே நற்கோதையர்க்கு
நலங்கொள விங்குரைத்தான் சுப்பையாபிபாம் நற்றவனே.

---

அம்பாசமுத்திரம் போட்டோகிராபர் சோலை ஷண்முகம் பிள்ளை இயற்றிய

விருத்தம்.

வாணுட்டின் கோமகனும் மருள்விழிமான் மங்கையரும்
மருவுசர வணபவன்மேற்
பூணூலக் குழவியரும் புகழ்ந்துபாடப் பொய்புகலான்
கருணையன்பே யுருவெடுத்தோன் றலுக்
கோனருங் கொடையாளர் மெச்சவல்லான் குணமிகுந்த
துரைசாமிக் குமையத்தே
தேனுறுங் கனிச்சுவையுஞ் செம்பாலுந் திரண்டினிக்குந்
தமிழ்நலங்கு செப்பினன்றே.

---

நலங்கு என்னும் இப்புத்தகமானது தெளிவான நடையில் இனியபதச் சொற்களாலும் பற்பலவித நூதன வர்ணமெட்டுக்களாலும் அமையப் பெற்றிருப்பதினால் யாவரும் விரும்பத்தக்க விஷயமே. பாலியப்பெண்களுக்கும் மிக்க எளிதாக கானப்பயிற்சி யுண்டாக்கக்கூடியதே. இப்பெயர்பூண்ட புத்தகம் பலதேனும் இதற்கு முன்னமே பதிப்பிலிருக்கினும் இத்தகைமையுள்ளது பன்முறையும் பிரயோஜனமுளதே.

ஸ்ரீ சாமனா பாகவதர்,
திருநெல்வேலி மேலமாடவீதி.



ஸ்ரீதண்டபாணிதுணை

திருநெல்வேலி குறுக்குத்துறை என வழங்கும்
திருவுருமாமலையின் கண் எழுந்தருளிய
ஸ்ரீஸுப்ரமண்ய ஸ்வாமி

# நலுங்குப் பாட்டுகள்.

---

## காப்புத்துதிகள்.

விநாயகர்.

வெண்பா.

கற்பகத்தின் மிக்கக் கருணைத் திருவுருமா
வெற்பமரும் ஷண்முகனை மேதினியில்—விற்புருவ
வஞ்சியிடை வள்ளியுடன் வாழ்த்திநலுங்கோதப்பக்
கஞ்சமுகத் தைங்கரனே காப்பு.

ஸரஸ்வதி.

வெண்பா.

வெள்ளை மதகரியன் விண்ணவர்கோன் மங்கைக்கும்
வள்ளிக்கு நாயகனை வாழ்த்தவொப்பத்—தெள்ளமுதச்
செஞ்சொற் பிழையகற்றிச் சீர்பரவ வாணியின்பொற்
கஞ்சமலர்க் காலிணையே காப்பு.

ஸ்ரீ ஸுப்ரமண்யர்

வெண்பா.

மங்களஞ்சேர் வள்ளி மருவுகுரு தேசிகனின்
பங்கயத்தாள் போற்றும் பழவடியார்—சங்கமதி
லென்னை யொருவனா யென்மா சகற்றிடவுன்
பொன்னடியைத் தந்தருளிப் போது.

குற்ற மனைத்துங் குணமாகக் கொண்டென்மேற்
பற்றுவிடாப் பாவலனைப் பாங்கினில்—முத்தமிழைக்
கற்பகம்போ லீந்தருட் கனகமயில்க் காவலனை
சொற்பனத்தும் தீயே துணை.

நூல்

## 1. இராகம் குறிஞ்சி. கண்டஜாதி. ஏகதாளம்.

கௌரி கல்யாணம் வைபோகமே
கௌரி கல்யாணம் வைபோகமே.

1. ஜெயசங்கரிபுத்ர ஜெயதிவ்ய சேத்ர
ஜெயஸரோருகநேத்ர ஜெயமேரு காத்ர. (கௌரி)
2. மங்கைதெய்வானையை மணந்த ஸிங் காரா
வள்ளிபொருபுமா வடிவேலா சூரா. (கௌரி)
3. கொஞ்சிடனஞ்செயும் குமரகுரு நாதா
கொடியசூராதியைக் கொன்றபொற்பாதா. (கௌரி)
4. புள்ளிமயிலேறிவரும் புனிதகுண சீலா
போதிமுதலமரர்கள் புகழ்வடி வேலா. (கௌரி)
5. அன்புமிகுந்துரைசாமி அருட்பதம் பாட
அநுதினமுமுருகன்சீராடிக்கொண் டாட. (கௌரி)

---

இராகம் சங்கராபரணம்-ஏகதாளம்

## 2 (ஸ்ரீராமா ஜெய ஜெய)என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்

1. ஸாந்தாஞ்சேர் குறுக்குத்துறை ஸுப்ரமண்யர் மீதினிலே
சந்தமுடன் நலுங்குவைக்கத் தந்திமுகன் காப்பாமே.
2. இந்த்ராதிதேவர்முதல் இஷ்டமன்னர் வீற்றிருக்க
சுந்தரவேல் ஸுப்ரமண்யர் சுபமாக நலுங்கிடவே.
3. மஞ்சளுடன் குங்குமமும் மணமிகுந்த சந்தனமும்
கொஞ்சுமொழிமாதுவள்ளி கொண்டுவந்து நலுங்கிடவே
4. வெற்றிலையுங் களிப்பாக்கும் விதவிதமாய்ப்பத்திரியும்
சுத்தயேலக்காயுடனே சுருள்கொடுத்து நலுங்கிடவே.
5. மல்லிமுல்லை மருக்கொழுந்து மணமலர்கள் முடிசூடி
வள்ளியுடன் வடிவேலன் வைபோகமாய் நலுங்கிடவே.



அருமைதுரை ஸாமிபதம் அன்புடன் நாம்பாடகீதம்
விருப்பமுடன் மாதுவள்ளி வேலனுமாய் நலுங்கிடவே.

---

## 3 இராகம் காம்போதி-ஏகதாளம்.

(உன்னையேநம்பினேன்பன்னகசயன)என்றவர்ணமெட்டு

பல்லவி.

நலுங்கிடவாரும் நாதாமயூரா (நலுங்)

அநுபல்லவி.

துலங்கும்வடிவேல் துரையேகெம்பீரா (நலுங்)

சரணங்கள்.

1. வாஸப்பன்னீர்கெந்தம் விகஸிதக்காலம்
பூசிநலுங்கிட புனிதா என்ஜாலம் (நலுங்)
2. இன்னமுந்தாமத மேற்குமோ பொன்னாமி
இன்னவமுதன்னை சேர்வாய்கந்தஸாமி. (நலுங்)
3. மாசிலாப்ரகாசா மறைகள்போற்றுமீசா
காவலன்துரைஸாமி தன்னைக்காக்கும்நேசா (நலுங்)

---

## 4 இராகம் செஞ்சுருட்டி-ஏகதாளம்.

(ஸாமிக்கிஸரியெவரோ)என்றவர்ணமெட்டு

பல்லவி.

என் கண்ணாளாவாரும் நலுங்கிட (என் கண்ணாளா)

அநுபல்லவி.

பெண்ணாளவந்த பரமதயாளா (என் கண்ணாளா)

சரணங்கள்.

1. ஆசையில்லாமலே அப்புறம் நின்றீரோ நான்
காசுபணங்கைமேல் கேட்டேனோ (என்கண்ணாளா)
2. சித்தம்வேறாகி நான் சிமிக்கினைந்தேனோ நான்
முத்தம்கொடாமல்முகம் முறித்தேனோ (என்கண்ணாளா)
3. காமியென்றல்லோகருத்தினில் விநயம் ஆனா
ஸாமிபதம்பாட இதுஸமயம் (என்கண்ணாளா)

5 இராகம் தன்னியாசி—ஏகதாளம்.

(முந்திமுழுகிறபெண்ணை எனக்கொரு) என்றவர்ணமெட்டு

பல்லவி.

நீலமயூரா நலுங்கிடவாரும் நித்ய கல்யாணா (நீல)

அநுபல்லவி.

கோலாகலத்துடனே குறத்திக்குத்துறைவாழும்
வேலவா அநுதினம்விசிக்கம்தாகவே (நீல)

சரணங்கள்.

1. அன்னை தந்தையிலும் அதிகம் தரித்த அன்பனே இன்பனே
உன்னைவிடவேறு உண்டோ புவிதனில்
எக்கோமும் இதம் பேசிநீயென்னுடன் (நீல)
2. அஞ்சலென்போர்க்கெல்லாம் தஞ்சமென்றே காக்கும் ஆறுமுக
வஞ்சமில்லாமலே கிஞ்சிதம் வினைபட (வேலனே
கொஞ்சுமுத்தையின் சீருடிக்குலாவிக்கொஞ்சி (நீல)
3. கோலமயிலேறி விளையாடும் வடிவேலா குமரகுருபரனே
காலம் விளைகாமல் கண்மணிகிய மிபிகை
பாலன் துரைசாமி பதம்பாடியாடவே (நீல)

---

6 இராகம் கல்யாணி—தாளம் ரூபகம்.

(சங்கரசச்சிசகலசக்ருட) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடவாரும் சுப்ரமண்யா
நன்னயமாய்ப் பாடிப்பாடி (நலு)

சரணங்கள்.

1. மல்லிகை இருவாக்ஷி முல்லை
மருக்கொழுந்து மலர்ஸம்பங்கி
மருவுடன் மணமாலைகட்டி
மகிழ்ந்து இதம்சூடியாடி (நலு)



உ. மனமகிழ்ந்த மயில்வாஹனா
மந்தஹாஸா மாதர்நேசா
ஜெகம்புகழ்துரை ஸாமிபதம்
சிங்காரமாய் சேர்ந்துபாடி (நலு)

---

7 இராகம்-பியாக். தாளம்—மிஸ்ர கதி.

(வந்தனம் தந்தேன்) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடவாரும் நாதா நலுங்கிடவாரும்

அநுபல்லவி.

நலுங்கிட நீர்வாரும்நாதா கங்கைவள்ளியுடனே
நாதனே போதனே நானிலத்தோர் பணிபாதனே (நலு)

சரணங்கள்.

1. சண்பகம் பன்னீர் மகிழ்தாழை ஸம்பங்கி
வெண்டாமரைப்புஷ்பத்தால் வேடிக்கையாககட்டியே
வேலனே லோலனே வேண்டியோர்க்கநுகூலனே. (நலு)
2. கதம்பபுஷ்பங்கள் பந்துகட்டிபாடவே
விதவிதமாய் துரைஸாமியும் விரும்பி நலுங்குபாடவே
வீரனே சூரனேவேதாந்திநேந்திரனே. (நலு)

---

8 இராகம்-சங்கராபரணம். தாளம்—சாப்பு.

(என்முகம் பார்த்தருளப்பா) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

ஆறுமுகவேலா நீர்வாரும் இப்போ
பெருமை நலுங்கிட்டு பேதையைக்காரும் (ஆறு)

சரணங்கள்.

1. சிறுமிவந்தேனென சிணுக்கமேனோ உமக்கு
பொறுமையாக இன்று புகழ்ந்து நாம் நலுங்கிட (ஆறு)

2 ஐயனுமக்கென்னை அமைத்ததும் பாதிஷ்டம்
அடிமை செய்தக்கால் ஆகுந்துமேல் அதிர்ஷ்டம் (அதா)

3. ஆயிப்பருவத்திலென்னை அன்பாய் மணம்புரிந்து
ஆரியமயிலே தனை வரமிக்கருள்தாவே (அதா)

---

9 இராகம்-பியாக்கடை. தாளம்-சாப்பு.

(இவர்தான் இவர்தான் இவர்தானெனக்கு சுந்த)
என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சமயம் இதுவே சமயம் நாம் நலுங்கிட
சமயம் நற்சமயம் இதுவே (சமய)

அநுபல்லவி.

உமையவளின் தருள் உத்தமகுலதீர
உலகெங்கும் புகழ்பெறும் உபகார அலங்கார
துள்ளல் { உன்மனதிற்கு உகந்த தேவிதான்
உசிதமாக விளையாடவேதான் } (சமயம்)

சரணம்.

வாலிபப்பருவமாச்சே மன்னா நீயென்னைச்சார
மாலைப்பொழுதுமாச்சே மங்கை நானுன்னைச்சேர
மேலும் மேலும் விரகம் மிஞ்சுதென் ஆவிசோர
மின்னாள் யாரொடு சொல்வேன் என் மனதாவல்தீர
துள்ளல் { சொல்லுலகினில் துரை ஸ்வாமி பதம்
சொல்லுமன்பர்கள்க்கித்துவாழ்மிதம் } (சம)

---

10 இராகம்-காபி. ஏக தாளம்.

(அன்னமே குயிலினமே) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்,

1. நலுங்கிடவே வாடா குலுங்கிடவே மெய்த்தன்துரையே
(துள்ளல்.)
நலுங்கிடவே வாடா ஸ்வாமி குலுங்கிடவே மெய்த்தன்துரையே. (ந)



செண்டாடவும் பந்தாடவும் செல்வ வடிவேலா
(துள்ளல்)
செண்டெட்டிப் பந்தாடியே சிங்காரமாய் விளையாட (நலு)

3. வெற்றிலை பாக்கு அளிப்பேனுன் வீசிப் பன்னீர் தெளிப்பேன்
(துள்ளல்)
வெற்றிலைபாக்கு அளிப்பேன் ஸ்வாமி வீசிப்பன்னீர் நான் தெளிப்பேன் (நலு)

4 ஸரஸமொழியாடுவேன் துரைஸ்வாமிதம்பாடுவேன்
(துள்ளல்)
ஸரஸமொழியாடுவேன் துரைஸ்வாமி தம்பிகம்பாடுவேன் (ந)

---

11 இராகம்-காபி. ஏக-தாளம்.

(கைலைஜாதுடாலாதியா) என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. ஸரஸ உல்லாஸ லோலா சரவணபவவேலா
சரமதால் நலுங்கிட கலக்கமென்னடா லீலா (ஸரஸ)

2. காலுமெத்தானுமே நானுனக்கனவிலுமறவேனே
வேலுங்கைக்கொண்டநாதா வேண்டுமென்றின்னம்வாதா
(ஸரஸ)

3 ஆசைநேசமுள்ளகாமி அந்தரங்கஞ்சொல்லும் ஸ்வாமி
தாஸன்துரைஸ்வாமி தன்னை தயவுடன்காருஞ்சொன்னேன்
(ஸரஸ)

---

12 இராகம்-கமாஸ். தாளம்-ஆதி

[ஸாரஸமுக பரமம்மா] என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஏனின்னம் நலுங்கிடத்தாமதமா
என்னைத்தொட்டுத்தாலிகட்டியபின் (ஏனின்னம்)

1. கின்னர கிம்புருடர் மீதில் வன்மையைக் காட்டுகிறீர்,
சொன்ன சொற்றவறாமல் நம்மைப் புரக்கவேண் (எனின்னம்)
2. கள்ளத்தனத்தை நீரும் மெல்ல மெல்லக் காட்டுகிறீர்
எள்ளளவும் நல்லமனம் இல்லையென்றே காட்டுகிறீர் (எனி)
3. பிறையணிந்த சங்கரனும் பெற்றருள் சுப்ரமண்யர்
துரைசாமி சற்றமிழ்ப்பதம்பாடி யாடியும் (எனின்னம்)

## 13 இராகம்-காபி. தாளம்-ரூபகம்.

(கண்ணனைக்காணுமேலே) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

மோடி இன்னும் செய்வதேன் சீமுகமறியா என்ஸாமி (மோ)

அநுபல்லவி.

நாடியே ஈமிருவருமாய் நலுங்கிடுவோம் ஸாமி (மோ)

சரணங்கள்.

1. ஆசைநேசா அழைக்கிறோமே அருகேயாகுதே ஸாமி
நேசமென்னும் பாசங்கொஞ்சம்
நினைப்பில்லையாமல் ஸாமி (மோடி
2. சித்தமயில் வாகனனை சிந்தித்தேபுராம் ஸாமி
பக்தன் துரைஸாமிபதம்
பாடியாடியும் ஸாமி (மோடி)

## 14 இராகம்-பியாக். ஏக-தாளம்.

(இத்தனை கோபமாதுமா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

இன்னமும் தயவில்லையா (இன்னமும்)

அநுபல்லவி.

ஷண்முகா நீ என்னுடனே ஸந்தோஷமாய் நலுங்கிட [இ]



சரணங்கள்.

1. எத்தனை நாளாகவோ சித்தமுருகுதே இந்தவைத்து
சித்தமுனைக் கற்றுமிருப் பத்தியோடுகூட
வெற்றிவேலனையுன் சோ்ந்து நான் வேண்டுவே (இன்)
2. அல்லும் பகலுமென்றன் அறிவில் நிறைந்திருக்கும்
புன்னகையில் வேலா உன்னை பூஜைபண்ணி சேவித்தேன்,
உன்னம் இத்தனை மட்டும் வேண்டாம் உற்றவா ஸாமி நீ (இன்)

## 15 இராகம்-பியாக். தாளம்-ரூபகம்.

(இந்நமுகி வானிடமே) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கண்மணி காமனுடன் கூடி
காலம்போகுதே வீணாயோகுதே (கண்மணி)

சரணங்கள்.

1. பொறுக்கமுடியவில்லை இனி போற்றிசெய்கிறேன்
மறுக்கலான் சல்லாபம் இல்லை
மயிலேல ஏறுவாயோ என்றுமிலே சேராயோ [கண்]
2. வஞ்சமேனோ கொஞ்சிவிட்டு வாடச்செய்கிறாய்
கொஞ்சியென்னை மிஞ்சினிதம்
கூடலாகாதோ விளையாடலாகாதோ (கண்)
3. செஞ்சொல் துரைஸாமி பதம் செழிக்கப்பாடினேன்
இஞ்சித்தென் மேல் கிருபைவைத்து
கிட்டிவாராயோ கட்டிமுத்தந்தாராயோ [கண்]

## 16 இராகம்-மோகனம். தாளம்-ஆதி

(அநீதயமென்னசொல்வேன்) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடுவோம் மானே உன்னை
நயந்துசெய்து மனோகராய நாளே [நலு]

சரணங்கள்.

1. தினந்தினம் நினைந்துன்னை நாடி.
நற்செல்வி தழ் கடித்துமே கூடி
என்-மனதினிலாசைகொண்டாடி.
மருவிடவாமையல்கூடி (நலு)

2. என்னசொல்வேனுந்தன் மோசம்
இந்-கெவராலுஞ் சொல்ல ப்ரயாஸம்
கன்னிபுந்தேகப்ரகாசம்
போதுங்-கண்டதில்லை யிதன்யாஸம் [நலு]

3. அன்னமே சிட்டியே வாராய்
என்னை-பன்புடனே யிட்டிப்பாராய்
என்-சின்னதமாய் முத்தந்தாராய்
துரை-ஸாமிபதம் நீதங்கூறாய் (நலு)

---

17 இராகம்-காகாப்பிரியா. தாளம்-ஆதி.
(விடமு ஜாயலே) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கந்தனைத்தன்னில் நீரும் நலுங்கிடவாரும் (நல்)

அநுபல்லவி.

சிங்காரா ஸத்தியரூபா
தினமுஞ்சேர்ந்து மனமும் மகிழ்ந்து (நல்)

சரணம்.

சந்திரவதன ஸர்ஜனரக்ஷா ஸமயமிதுவே நலுங்கிடவே
மந்தஹாஸ ரதிகலையில் வந்து வந்து
வந்து பார்க்க விழியும் பூக்க ஸரஸசெய்வது தகுமோ
சொந்தமேசா நீர் தயவுசெய்து (சொல்லும்
விந்தை துரைஸாமி பதமேபாடி. (நல்)

---



18 இராகம் பரசு. தாளம்-சாப்பு,
(செலியா ஸாலுநே) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சரணம் செய்வேனே. (சர)

அநுபல்லவி.

தருணமிதுவே தஞ்சாள் நலுங்கிட (சர)

சரணங்கள்.

1. அருளுருவாகிய ஆனந்தவேலவா
கருணையைநாடியே காத்திருக்கின்றனன் (சர)

2. கொஞ்சுங்கிளிமொழியாள் வஞ்சித்தெய்வானை வள்ளி
ரஞ்சிதமாய்ப் புகழும் குஞ்சரி நாயகா (சர)

3. உங்களுமை துரைஸாமி புனைந்தபதம்
சங்கையின்றி நான்பாடி சந்ததமுமைத்தேடி. (சர)

---

19 இராகம்-கல்யாணி. ஏக-தாளம்
(ஜெகமதிற் துணையின்றி) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்,

1. மாதே நீ நலுங்கிட உல்லாஸமாக மகிழ்ந்துமே வருவாயே
கோதே நீ என்மீதில்கோபஞ் செய்யாமலே கொஞ்சிடவே
(நலுங்கிடவா

2. அன்னமே உன்மீதிலாசைகொண்டு நானருகினில்வந்திருக்க
ஸ்வர்ணமே நீயுமென் அந்தரமா தாசேசுகமதாய்வரத்தடை
(யேன்

3. ப்ரணவப்பொருளைப் பிதாவுக்குபதேசித்தப்ருமத்தை அனு
(தினமும்
சரணமென்றடிதொழும் துரைஸாமி பதம்பாட ஸரஸமாய்
(வருவாயடி.

20 இராகம்-கமாஸ். தாளம்-ரூபகம்.

(கண்மணியே இன்னம் தூக்கமா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிட நீ ஜாலஞ்செய்வது ஞாயமல்லடா ஸாமி (நலு)

சரணங்கள்.

1. கலங்கிமனம் மாதரோட கண்மணியே தர்மமல்ல
வலியவந்தோமுனைச்செய்தபின் வாதமேனோடா ஸாமி (நலு)

2. துன்னும்மாரிமேலிவந்து சுகந்தந்த வேளை என்மேல்
எள்ளத்தனை மனமுங்கூட இரக்க மில்லையோ ஸாமி (நலு)

3. சித்திரம்போல் நின்று உந்தன் செங்கமலப் பாதம்போற்றி
பத்தன் துரை ஸாமிபாட்டப்பக்கம் வாராயோ ஸாமி (நலுங்கிட)

21 இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ரூபகம்

(இந்த மோசம் செய்ய நீரும்) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சரணம்கதி நீயேயென்று சார்ந்தேனும் பாதம் ஸாமி (சர)

அநுபல்லவி.

கருணைமிகுந்த நலுங்கிடவே ஸரஸமாய்வாரும் (சர)

சரணங்கள்.

1. பச்சைமஞ்சள் அரைத்து வைத்தேன் பாதத்திற்பூச ஸாமி
இச்சையுடன் நலுங்கிடுவோம் எழுந்திரும் ஸாமி (சர)

2. செஞ்சொல்கவி துரைஸாமி சேர்ந்தவர்க்கிரங்கி ஸாமி
தஞ்சம் கண்பார் தயவுசெய்து தாழ்வில்லாடவே (சர)



22 இராகம்-கமாஸ் ரூபகதாளம்

(எம்சேதுலேமிசைது) என்றவர்ணமெட்டு

பல்லவி.

அன்னமே பசும்பொன்வர்ணமே இப்போ
அன்புடன் நாம் நலுங்கிடுவோம் வாடி (அன்ன)

அநுபல்லவி.

இன்னமுதச் சுவையுள்ள இதனில்
இல்லையோ மனம் வரவில்லையோ அடி (அன்ன)

சரணங்கள்.

1. கன்கலந்த கண்மணிதன்
கண்மணியே உன்னை கெஞ்சுகிறனடி
பண்கலந்த மொழியாளே உனைப்
பார்த்ததும் மனம் சேர்த்தேனடி (அன்ன)

2. ஓசைக்கடல் அமுதே எந்தன்
உச்சிதமான கட்டி முத்தேயடி
ஆசை துரைஸாமியின் பதம்
அதிசயமாய்ப் பாடிக்கொண்டாடவே அடி (அன்ன)

23 இராகம்-தேவகாந்தம்-ஆதிதாளம்

(இகயாலனேவாளிதோ) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடவே வாரும் என் ஐயனே நேசனே (நலு)

சரணங்கள்.

1. குலுங்கிடவே கொண்டையுடன் கூடிஆடிப் பாடிபாடி (நலு)

2. அந்தர் பன்னீர் ஜவ்வாதுடன் இருக்கும் பொன் தட்டனே (நலு)

3. தாஸன் துரை ஸாமிபதம் தேசமாகப் பாடிநிதம் (நலு)

24 இராகம்—செஞ்சுருட்டி—ஆதிதாளம்.
(என்னுடன் நீ பேசாதது ஞாயமோ) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்

1. நலுங்கிடநீவாரா செய்வது ஞாயமோ
குலுங்கி நகைத்திட்ட காரணம் என்னடீ. [நலு]

2. மிஞ்சியே உந்தனைக் கெஞ்சுகிறேன் நலுங்கிட
மஞ்சளுலருது வஞ்சமென்னடா ஸாமி. [நலு]

3. நாமிருவருமாக நலுங்கிடவே துரை
ஸாமிபதங்களை ஸரஸமாய்ப்பாடியும். [நலு]

---

25 இராகம் செஞ்சுருட்டி ரூபகதாளம்.
(மையலாகினேன் ராஜா) என்றவர்ணமெட்டு.

பல்லவி

நலுங்கிட வாரும் ஸாமி (நலு)

அநுபல்லவி

குலுங்கிஆடி கூடிப்பாடி (நலு)

சரணங்கள்

1. உடலும் உயிரும் போலவே உறவு மருவத்தேடியே
உளமும் நாடுதே-எந்தன் (உளமும்)

2. மாரன் கணைமீறுதே மையல் மிக சேருதே
ஆவிசோருதே-எந்தன் (ஆவி)

3. குறுக்குத்துறை வாஸனை குலவயநிதேசனே
சிறக்கப்பாடினேன்-துரைஸாமி (சிறக்க)



26 இராகம்—மோகனம். ஆதி-தாளம்.
(பவன்குரு நாஹிரத) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சரவண பவலோலா நலுங்கிடவா (சர)

அநுபல்லவி.

பரமனருளால்வந்த பன்னிருகை வடிவேலா (சர)

சரணங்கள்.

1. சித்ரமணி பந்தலிலே சின்னஞ்சிறு மாதருடன்
முத்து கையார்களோடு முத்தப்பெண்மணிதலைவ
உத்தமனென்று தேடி ஓடிவந்து நலுங்கிட்டேன். (சர)

2. பருவமுள்ள காதலியர் பக்தி புரியாகக்கூடி
அருமைதுரை ஸாமிபதம் [illegible] கொண்டாடி
மருமலர்ப்பூப்பந்தாடி மா[illegible] மாலைகாடி. (சர)

119068

27 இராகம்—காம்போதி—சாபு-தாளம்.
(பரமாதுரை கம்பலாகரதையா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

மணமக்களையே நலுங்கிடவேவாடி. (மண)

சரணங்கள்.

1. உன் செங்கையினால் சேர்த்தணைத்திட
தங்கையே நீ நன்றிதன்னைக்கூட
உன் கொங்கையில்தான் நீ இனிமையாட
சங்கையின்றியே செல்விதற்காடி. (மண)

2. ஓடிவந்தொரு முத்தந்தாடி
கோடி கோடி புண்யமுண்டடி
தேடியே துரைஸாமிபதம்
பாடியே நீ பண்புடனே. (மண)

### 28 இராகம்-செஞ்சுருட்டி. ரூபக-தாளம்.

(அரன்யந்தே ஓராசன்) என்ற இந்திரசபா வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. மாலையிட்ட மாதர் நேசா நலுங்கிடவே
மணையணைந்த மலரணைமேல் எணையணையவே
2. இரவும் பகலுமாக என்னைப்பிரியவில்லையே
இருந்த அன்பை எடுத்துச்சொல்லக்கூடவில்லையே.
3. வெற்றிவேலா என்னுடனே கற்றவித்தையா
உற்றதுரைஸாமிக்கருள் சற்றுமில்லையா.

—•—

### 29 இராகம்-காபி. ஏக தாளம்.

(கோஞ்சவயதாக்சே என்னை) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடவே வாடா ஸாமி நாதா முத்தக்தாதா (நலு)

சரணங்கள்.

1. நலுங்கிடவாடா நாயகி லோலா
ஸாமி-அலுங்கிவந்தேன் தேடி
இதோ-குலுங்கி வந்தேன் ஆடி
ஸரஸமாக நலுங்கிடவே ஸமயமிதுவே (நலுங்கி)
2. காதல் மிகுந்திடக் கருத்துமலைந்திட
எனக்-குறைக்கமில்லையடா
உனக்-கிறக்கமில்லையோடா
சமயமிதோ கருணையிதோ ஸமுகங்கூட. (நலுங்கி)
3. ஸரஸனே வாடா சங்கையேனோடா
என்ன-கோபமோடா ஸாமி
தரு-மோடா இந்தபோடி
துரை-ஸாமி பதம்-பாடிவினை-யாடிடவே (நலுங்கி)



### 30 இராகம்-மோகனம்-ஜம்பை தாளம்.

(மருவிருஞ்சேந்து ஜென்மஸாபல்யமாதும்) என்றவர்ணமெட்டு

பல்லவி.

கன்னே கண்மணியே நீ நலுங்கிடவாராய்
காதலாகி நானுங் காத்திருக்கலாமோ. (கன்)

அநுபல்லவி.

பெண்மணி நீ என்னுடனே நலுங்கிடவாராய்
வர்ணப்பொடி மஞ்சள் வகைவகையாய்க்கொண்டு (கன்)

சரணங்கள்.

1. ஆடியும் பாடியும் அரம்பைகள் நிற்க
ஆரத்தியேந்தியே ஆயிரம்பேர் காக்க
காடியுன்னை நானும் நயந்துமேயிருக்க
மோடியாய் நீ மௌனம் ஸாதிக்கலாமோ (கன்)
2. ஸரஸமொழியாளே ஸன்மார்க்கமணியே
ஸல்லாபமாகத்தான் சார்ந்திதன்னை வாராய்
விரஸமாயிருப்பதும் விச்வாஸமாமோ
துரைஸாமிக்கருள்செய்ய தருணமிதுவே (கன்)

—•—

### 31 இராகம்-பலகம்ஸா. ஆதி-தாளம்.

[தீருடோராமுடு] என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நண்பனே என்னுடன் நலுங்கிடவாருமென் (நன்)

அநுபல்லவி.

இந்தவேளைவந்து காரும் மந்தஹாஸவதன (நன்)

சரணங்கள்

1. அன்பா பெண்ணை மணந்த ஆச்சினை விசுவாஸனே
ஆதரித்துக்காருமே ஐயனே முருகையனே (நன்)
2. கொஞ்சியிதழ் கடித்த குழவிதோபாரும்
செஞ்சொல் துரைஸாமியை செப்பியும் மிக மோடியோ.(ந)

—•—

**32** இராகம்-அடாணா-ரூபக-தாளம்.

பல்லவி.

சித்ரமுத்து ரத்நமாலையிட்ட மணவாளா—நின்
சித்தம்மகிழ்ந்து நலுங்கிடவாருங் கண்ணாளா— (சித்ர)

அநுபல்லவி.

குற்றமனைத்துங் குணங்கொள்ளும் லோலா
(துன்னல்)
கோலாகல-லீலா அநுகூலா குண-சீலா நிதம் (சித்ர)

சரணம்.

சந்த்ரபிம்பந்தைப் பழித்திடுவதனமாது-சொல்லும்
விந்தைமொழிதன்னை கேட்டருளும்போது
சுந்தரமதன் கணைவந்து தாவுதே எந்தன்மீது-உந்தன்
சிந்தைதனிலின்பம் எழுங்கோ இவ்விதமாது
கந்தஸாமிதன்னைச்சொக்கமீது பார்த்திடும்
(துன்னல்)
எந்தன் துரை—ஸாமிபதம்-சிந்தைமகிழ்ந்-தாடிப்பாடி (சித்)

—oo—

**33** (ஸங்க-ஸங்க—ஸங்க-மகரிஸ) என்ற கோட்டின் வர்ணமெட்டு.

பல்லவி.

வாரும்-வாரும்-வாரும் நலுங்கிட
தீரும்-தீரும்-தீருங்கவலையை
வாரும்-வாரும் வடிவேலரே
வரமது அருள்புரிவாய்— (வாரும்)

சரணம்.

காலைக்கதிர்முக மணவாளா-நின்
வாலைப்பருவமும் மகிழ்ப்பெற
வாஸவன் துரைஸாமி மனமகிழ
வரமது அருள்புரிவாய்— (வாரும்)



**34** (சித்தவத்தும்மாரி நைறு) என்ற இந்துஸ்தானி வர்ணமெட்டு.

பல்லவி.

வாடா ஸாமீ வாடா நலுங்கிட ஹுஹு. (வாடா)

சரணங்கள்.

1. வாடாதைபக்தாடா ஸாமீவர்மமே ஜோடா
போடா இந்தமோடிவேண்டாம் புண்யபுருஷா ஹு-ஹு (போ)
2. சிந்தை பெண்மை சொல்லடா நீ சீக்கிரம்வாடா
நிந்தனைக்கு இடம்வேண்டாம் நிர்ப்பகல்யாணு-ஹு-ஹு. (நிந்)
3. பால சுப்ரமண்யா உன்னை பாடிப்புகழ்ந்தேன்
சீலன் துரைஸாமிக்குநீ வித்திபருள்வாய்-ஹு-ஹு. (சீலன்)

—oo—

**35** { My lovely dear come near } என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
{ மை—லவ்லி—டியர்—கம்—நியர் }

பல்லவி.

நலுங்கிடவாரும் நாதா நீர் (நலு)

அநுபல்லவி.

மலரணிநேசா மாமயில்வாஸா (நலு)

சரணங்கள்.

1. பூவதந்தன்னில் யாவரும்போற்றியே
புகழுஞ்சீலா போற்றிசெய்குவேன் (நலு)
2. ஏதேனுங்குற்றம் என்மீதிருந்தாலும்
மாதைமருவ வாதில்லாமலே (நலு)
3. செந்தமிழ்துரை ஸாமி வரும்பதம்
சேருடன்பாடி சிங்காரமாக (நலு)

—oo—

**36** (பஸமகஜலோடி) என்ற "பார்ஸி" இந்துஸ்தானிவர்ணமெட்டு.

பல்லவி

காதனே கிருபைகூறும் ஸாமீ நலுங்குஇடவே நாம். (காத)

அநுபல்லவி

காதலாகி-காமியுமாகி கலங்கிறான் தவிக்காமல். (காத)

சரணம்.

சந்ததந் துதித்தேன் சரவணபவா
சற்றேனுந்தயை இல்லையா ஸாமீ, சற்றேனுந்தயை இல்லையா
கொவ்வைச்செவ்வாய் முத்தம் கொடுத்து மென்னுடனே
கூடிப்பந்தாடவே வாரும் ஸாமீ கூடிப்பந்தாடவே வாரும்
கூவியழைத்தேன் நாவிக்கைபிடித்தேன்
கட்டியணைத்தே நீ காதல் தணிக்க
ஷண்முகா இன்னமும்
சற்றேனுந்தயை இல்லையா ஸாமீ சற்றேனுந்தயை இல்லையா
(நாதனே)



பூச்செண்டாடல்.

☞ 38-வதுபாடலைக் கவனிக்க

37 இராகம்-தேவகாந்தம்-ஆதிதாளம்
(இகயாலனே வானிதோ)என்றவாணமெட்டு.

பல்லவி

ஈசனே என்னேசனே இன்னமும் ஸங்கோஜமேன் (ஈச]

சரணங்கள்

1. பாசம் வைத்த பென்னுடன் நீர்
பந்தடிக்கவாடவாரும் (ஈச)
2. கொவ்வை யிதழ் உண்டிடவே
கோதையுடன் கூடவாரும். (ஈச)
3. உறைவிடம் உண்டோ பகர்
துரைஸாமிநதம் கிசர் (ஈச)



38 இராகம்-தோடி-ரூபகதாளம்.
(ஸ்ரமகமருவிக்கூட)என்றவர்ணமெட்டு

பல்லவி.

சித்தம்வைத்து செண்டாடவே சென்றழைத்துவா போ [சித்த]

அநுபல்லவி

நித்தக்கொஞ்சி முத்தந்தந்திடும் சக்திவேல்முருகையனை [சித்தம்]

சரணங்கள்.

1. சித்திரையிலும்வெலினைச்சுகம் பக்திசெய்யுமென்னுடன்
நெத்தமயிலேறிவந்திங்கு நித்தமும் பூச்செண்டாடவே [சித்த
2. மருமலர்முல்லைவாடுதே மனம் மருவச்சமயம்தேடுதே
முருகனுடன்பந்தாடவேசகி முன்னமேயழைத்தோடிவா [சித்
3. அற்புதகுமாரனை ... சக்திவிற்பாடவே
சொற்புகழ்சரவணபவனை கோகுலனடனழைத்தோடிவா [சித்

39 இராகம் இந்துஸ்தானிகாபி—ஆதிதாளம்
(மாயதாளகிவேலாமீடி) என்றவர்ணமெட்டு.

பல்லவி

செண்டாடவாரும் செல்வக்குமாரா சிக்கிரமாகவே

அநுபல்லவி

கொண்டாடவாரும் கோதையாளுடனே
வண்டாடுமென்மலர் மணம்நுணில்ககூடி. (செண்)

சரணங்கள்

ஞானபுகழ ஞானகுருவாய்வந்த ஞானமதகானே
அண்மனண்டே கண்டேன் தந்த
கோலக்குமாரா கூடி நீ என்னுடன் (செண்)
உன்னினிவேன் பெண்ணெனன்றே நேசமதுணர்வா
இன்னருந்தயை மன்னருமில்லையா
மன்னன் துரைஸாமி மகிழ்பாதம்பாடிடும். (செண்)

40 இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.
(நோட் வர்ணமெட்டு.
கண்ணிகள்

1. பந்தாடிடவே { பியூடிபுல்-லேடிஸ் / Beautiful Ladies } சுற்றிட்டடி.
புத்திமகிழ்ந்திட கந்தமலர் சூடி
புள்ளிமயில்வேலன் வள்ளியுடன் — (பந்தாடி)

2. — நடுஜெய்வண்ணம் மணஞ்செய்த நித்யசிங்காரன்
பக்திதமாகவே சங்கீதம்பாடவே
ஈசன்குமாரனுடன்னே சமதாய் [பந்தாடி]

3. மருவுடன் சம்பங்கி மலர்ந்தரோஜாசெண்டுகட்டி
ஆறுமுகசுவாமி அருணகிரிதம்பாடி
ஆடிடவே பந்தாடிடவே (பந்தாடி)

(7-வது பாடலைகவனிக்க)

41 இராகம் பியாக் — தாளம் திஸ்ரகதி
(வந்தனந் தந்தேன்) என்றவர்ணமெட்டு.
பல்லவி.

செண்டாடவேவா பூச் செண்டாட நீவா (செண்)

சரணங்கள்.

1. எண்டிசையுள்ளோர்போற்றிடுமெங்கள்ஈசனுக்குபதேசனே
வா-வா-வா-வா-செண்டாட பந்தாட
செண்டுகள்கட்டிப்பந்தாட. (செண்)

2. மல்லிகை முல்லை மருக்கொழுந்து மணமிகுந்த செண்பகம்
அல்லி-மலர் கொண்டுசேர்த்து கொண்டுமலர் கட்டியே.(செ.

3. சித்ரமயிலேறிய செல்வனையனுதினம்
பக்தி-செய்து-பாடினேன் பாடினேன்
பாடினேன் குரு சுவாமிபதம். (செண்)

---



42 இராகம்-குந்தலவராளி. ஆதிதாளம்.
(சரசா சம்மரி இகதுரா) என்ற வர்ணமெட்டு.
பல்லவி.

வாலமலர் பந்தாட வாரும் வேலா
வாலவ தேசானுகூலா. (வாலமலர்)

அநுபல்லவி.

பாசமதாய் நானுன் பதமலர் தேடி
பலமுறை நானுந்தன் புகழ்பாடியாட (வாலமலர்)

சரணம்

கருணை கூராயோ கவலையைத் தீராயோ
தருணம் இதுவே தயை செய்வாய்
மருமலர் நறுமலர் மணமலர் செண்டாட
அருந்தமிழ் குருசுவாமி பதமதைப்பாட (வாலமலர்

43 இராகம்-சங்கராபரணம் ரூபகதாளம்.
[நந்தலாலா ஸ்வாமி] என்ற வர்ணமெட்டு.
பல்லவி.

வாரும் பந்தாட ஸ்வாமி (வாரும்)

சரணங்கள்.

1. ஆயிரங்கோடி காமருடைய ஐபவுடிவேலவனே
சரிரண்டும் தெரியாத எழை யென்னுடன் (வாரும்)

2. சந்தனம் பன்னீர் ஜவ்வாதுடன்
சாந்து மஞ்சள் குங்குமமோடு
வந்தனந்தந்து கொஞ்சு மென்னுடன்
வாது செய்யாமலே (வாரும்)

3. கந்தனே நின்பதந்தேடி காத்து நிதந்துதிபாட
செந்தமிழ் குருசுவாமிபதம் செவியிற் கொள்வோனே (வா)

44 இராகம்-சங்கராபரணம் ஆதி-தாளம்.

பல்லவி

பந்தாடவாரும் பாவையைக்காரும் (பந்தா)

சரணங்கள்

1. கந்தனே எவ்வித நெஞ்சம் கலக்கமேனோ உம்நெஞ்சம்
காதலைத்தீர்த்திடுவீர்கொஞ்சம் கண்மணியே நான்தஞ்சம் (பந்
2. பலவித மலர்களைச்சொரிய பரியளவாலமுடன் தெரிய
குலாவி மருவமனந்திரிய கூடி இன்பலோகமரிய (பந்தா)
3. பிறைமுடி தனில் மலர்சூடி சித்தமுமென்னையே நாடி
துரைஸாமி சொற்பதம்பாடி சந்தோஷமாக விளையாடி (பந்தா)

—————

☞ 8 வது பாடலைக்கவனிக்க

45 இராகம்-சங்கராபரணம்-சாப்பு தாளம்

(என்முகம் பார்த்தருளையா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

என்னுடன் பந்தாடுமையா இன்னும்
எனக்கார்துணை சாமிதுரையா (என்னு)

சரணங்கள்.

1. என்னையாள் வடிவேலா இறையவன் பாலா
பின்னையார் தென்குறை பேசுவேன் சீலா (என்னு)
2. நீத்திரவும் போகாத நேசமாமின்புன் சிரிப்பை
பார்த்தாலும் பசிதீரும் பன்னிரு கண்ணே சேர் (என்னு)
3. செந்தமிழ்க்கினிய சிங்காரபதம் பாடும்
உந்தன் துரைஸாமிக்கு உற்றதுணை யிருந்து (என்னு)

—————

46 இராகம்-பியாக்-ரூபகதாளம்.

(இதற்கோ நீபுமென்னை) என்ற இந்திரஸபா வர்ணமெட்டு

கண்ணிகள்

1. சென்டாடவே வாரும் ஸாமி செல்வவடிவேல் முருகா
குன்றுமெல்லிப்பூவெடுத்து குருமலர்தான் தொடுத்து
ஐயனே ஐயனே ஐயனே முருகையனே (சென்டா)



2. குறுக்குத்துறை தனில் வாழும் கொஞ்சுங்கிளியாள் மருகா
இரக்கம் வைத்து என்னைக்காக்க என்கவலையைத் தீர்க்க
வருவாய் வருவாய் வருவாய் என்றும் வருவாய் (சென்டா)
3. சுராஜர்பணிபாதா சுந்தரப்பன்னிருகையா
துரைஸாமி பதம்பாட துன்பமற இன்பம் கூட
ஓடிவா ஓடிவா ஓடிவா ஓடி ஓடிவா (சென்டா)

—————

47 இராகம்-சங்கராபரணம். ஏக தாளம்.

(ஸாரீ கம பாபா) என்ற கோட்டின் வர்ணமெட்டு)

பல்லவி.

சென்டாடவே வாரும் ஜெகமேபுகழும் லோலா
செங்கைவேல் செல்வக்குமார சேவற்கொடியின் நேசா செ

சரணம்.

1. மல்லிகை-சென்பகம்-மருவுடன் ரோஜா
மல்லிகை முல்லை-சென்பகம் ஜாஜீ-மருவுடன்ரோஜா
மாலைகட்டியே (சென்)
2. மிதமில்லாக்-கல்வியில்-மிதமும் நாம்-விளையாடி
மிதமில்லாக் கல்வியில்-மிதமும் நாம் விளையாடி
இதம் பெறுந்துரைஸாமி பதந்தன்னைப்பாடியே (சென்)

—————

48 இராகம்-சங்கராபரணம்-ஏக-தாளம்.

(எங்கள் அருமை மகாராணி) என்ற கோட்டின் வர்ணமெட்டு

(இங்கிலீஷும், தமிழும்.)

கண்ணிகள்.

1 வந்தனந் தந்தேன் { மை-லேடி / My-Lady } பந்தாடவாநீ எனைத்தேடி
{ இன்-திஸ்—மூன்—எம்ப்ரேஸ்—மீ / In this moon embrace me } என்னுடன் விளையாடிக்கூடவேநீ[வந்
2 { பீல்லவ்ட் லேடி கிஸ் மீ-நவ் / Beloved lady kiss me now } பலவிதவாஸமலருடன் { யூ / you }
{ ஹல்லோ-டியர்-கம்-நியர்-மீ / Hallo dear come near me } அழகியசேல் விழியாதே நீ { வந்த.

{ ஜாலி—ப்ரண்ட்—ஐ—ஆம் } காத்திருக்க நமஸ்சோமி சகிக்
{ Jolly friend I am } [திருக்க]
{ காலிங் யூ } கண்மணியேவருகிலே வாடி
{ Calling you } பந்தாடவே [வந்த]
1 { வாலவர் பணிதுரை { வீ ஷல் ஸிங் } [கீதம்]
{ ஸாமிபதம் சேசுமாய் } We shall sing }
{ பீ ஹாப்பி } பெண் { பீ—கன்டென்ட்—வித்——வாட்—
{ Be happy } மணியே } Be content with what-
யூ—ஹாவ் } வந்தனம்
you have }

49 (நந்தப்பாட்டு) வர்ணமெட்டு.

கண்ணிகள்

1. நலங்கிடப்பியநேசன் குஞ்சரநெறியுபதேசன்
இலங்கிய மந்திரதாலன்-தங்கம்—விராண்டருக்கானைநேசன்
2. அழகுமிகுந்த வேலவன் அருமைக்குவெரிலன்
பழகிய வடிவேலன்-தங்கம்-பக்தர்கட்கனுகூலன்
3. சத்திவடிவேல் முருகன் சங்கரனார் திருமகன்
பக்தியளிக்குங்குகன்-தங்கம்-பார்வதியாள் பாலகன்
4. வள்ளிமணவாளன் மங்கை குலவினன்
புள்ளிமயில் வேலன்-தங்கம்—புண்ணியர் அநுகூலன்
5. ஆறிருகண்ணடி அறுமுகவேலனடி
சூரசம்ஹாரனடி-தங்கம் சுப்ரமண்யவேலனடி.
6. பன்னிருநேத்ரனடி பரிபாலபாத்ரனடி
மன்னுசிவகோத்ரனடி-தங்கம் மகத்தான ஜோத்ரனடி
7. ஆறெழுத்துக்குருத்துறை ஆறுமுகஸ்வாமிதுரை
நற்றவம் புரியுந்துறை-தங்கம்-நமக்குற்ற முருகன்துரை.

50 (சக்கிலிச்சிப்பாட்டு) வர்ணமெட்டு.

கண்ணிகள்

1. தானே தேசனே எங்கும் பிரகாசனே
மாசில்லாக்குறவள்ளி மங்கையுல்லாஸனே
ஆசைநாயகனே அருமைவிச்வாஸனே (ஈச)



17 N°5

2. கீர்த்தனை மருவிய உத்தமபுதல்வனே
சித்துருவாகிய முத்துக்குமாரனே
முத்தமிழ்நகையுத்தன் பக்தருக்கருளிய (ஈச)
3. திங்கள்வதனசீலா தேவர்கட்கனுகூலா
மங்கை வள்ளி தெய்வானை மருவியகிழந்தசீலா
இங்கிதமாகவே யெல்லோரும் போற்றிய (ஈச)
4. நித்தமுமென்னுடன் சித்தமகிழவே
குத்துஸ்தனத்தினிப் பக்தி விரும்பிய
மெத்தையிலென்னைக்கூடி மோகத்தயர்ந்த [ஈச]
5. எத்திசையும் புகழும் புத்தி விசாலமோ
பக்தன் துரைஸ்வாமி பாடுந்தமிழ்க் கிறங்
பாக்கிய சலாக்கிய யோக்ய மெல்லாமருளும் (ஈச)

119068

51 (தாலாட்டு) வர்ணமெட்டு.

1. சீர்வளர் நெல்வேலி தென்பாலருமலையிற்
பார்புகழ வோங்கி நிற்கும் பாவலனே நாவலனே
2. ஆயிரண்டு கண்ணுடனே ஆற்றின்தன் மத்தியிலே
ஆறுமுகமாய மைந்த அருமை வடிவேலவனே
3. செஞ்சிலம்பு கொஞ்ச சிறு மின் கிண்கிணியசைய
நெஞ்சகந்துலக்க வந்த நித்தியனே ஸத்தியனே
4 சித்ரமயில் வாகனனே செங்கைவடிவேல்லவனே
நித்திரையிலும் விளங்கும் நிலைபெற்ற நாயகனே
5. ஞானச் செங்கரும்போ நன்மதுரச்செந்தேனே
தானத்தோர் போற்றும் ஷண்முகமே தரித்தவனே
6. அன்பர்குறை தீர்க்கும் அருமை பிகுமா மணியோ
இன்பமுற நல்கும் எங்கள் கொற்றவனே நற்றவனே
7. சரணாகதியென்று சார்ந்தமனம் நொந்தவர்க்கு
காமுதனி தீர்க்கும் கருணைப்பெருங்கடலோ
8. குறைகளையும் குருபரனே குறவள்ளி ரஞ்சிதனே
துரைஸாமிக்கேற்ற தூண்டாமணி விளக்கோ.

☞ மங்களம்

52. இராகம்—அசாவேரி—ஆதிதாளம்

பல்லவி

பார்வதி பாலனுக்கு ஜெயமங்களம்—திவ்ய
பன்னிருகை வேலனுக்கு சுபமங்களம் [பார்வதி]

அநுபல்லவி.

சூரஸம்ஹாரனுக்கு ஸுப்ரமண்யதீரனுக்கு
சங்கரி குமாரனுக்கு ஸாதுஜெனவீரனுக்கு [பார்வதி]

சரணம்.

ஸத்ய விலாஸனுக்கு ஸங்கீதலோலனுக்கு
முகமந்தஹாஸனுக்கு முத்தமிழ்ப்ரகாசனுக்கு
ஹாரகேயூரனுக்கு அறுமுக இன்பனுக்கு
கடம்பந் துறைவாஸன்பதம் கொண்டாடுமன்பருக்கு(பார்வதி)

நலுங்குப்புஸ்தகம் முதற்பாகம்
முற்றிற்று.


ROYAL PHOTOGRAPHIC STUDIO,

**Office:—Tinnevelly Town.**

☞ *Latest recreations of High Class Portraits.*

OVER 15 YEARS REPUTATIONS FOR EXCELLENCE, UNIFORMITY AND NEATNESS OF EXECUTION.

**Speciality:—Bromide Enlargements.**

**Charges:—Very Moderate and Fixed.**

DORAY & SONS,

*Royal Photographic Studio Agents,*

TINNEVELLY TOWN.

விளம்பரம்.

நலுங்குப்புஸ்தகம் (முதற்பாகம்).

இப்புஸ்தகம் வேண்டுவோர் அடியிற்கண்டிருக்கிற விலாஸத்துக்கு தங்கள் விவரமான விலாஸத்தைத் தெளிவாயெழுதி வி. பி. (V. P.) மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

{ இதன் விலை அணா 4. (அணா நாலே நாலுதான்) }
{ தபால் சார்ஜு வகையரு பிரத்தியேகம். }

ஒரேதடவையில் 10 புஸ்தகம் வாங்குபவர்க்கு ஒரு தகம் இனாம் கொடுக்கப்படும்.